## 3. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**26—**

**பள்ளியைத் தரம் உயர்த்துதல்**

***50927—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கம்பம் தொகுதி, உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம், உ. அம்மாபட்டி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திர சாதனை படைத்து மூன்றாண்டு சாதனை குறித்த சிறப்பு மலரை வெளியிட்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. ஈ.பி.எஸ் அவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–05*

*சிறந்த ஆளுமைத் திறனில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்வதற்கு விருது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 'சோழ மண்டலம் சோறுடைத்து'*

என்று சொல்வார்கள்; அந்த மண்டலத்தைக் காப்பதற்காக ஆணையிட்டிருக்கிற அதே நேரத்தில், ஆசிய கண்டத்திலேயே இல்லாத அளவிற்கு ஒருங்கிணைந்த கால்நடை பூங்கா ஒன்றை அமைத்து, வரலாறு படைத்திருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) 9 மருத்துவக் கல்லூரிகளை ஒரே ஆண்டிலே கொண்டு வந்து வரலாறு படைத்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அம்மா அவர்களின் வழியில் நடைபெறுகின்ற இந்த அரசு, மற்றவர்கள் சொல்வதைப்போல் மூன்று ஆண்டுகள் அல்ல; நூறு ஆண்டுக்காலம் இந்த ஆட்சி என்றைக்கும் நிலைக்கப் போகிறது என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே, எனக்குப் பிறகும் இந்த ஆட்சி 100 ஆண்டுக் காலம் நிலைக்கும் என்றார்கள்; அதற்கான ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிப்பதோடு எந்த நேரத்திலும், யார் வேண்டுமென்றாலும், எளிமையான முறையில் சந்திக்கின்ற அளவில் செயல்படுகின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு உறுதுணையாக இருந்து, எல்லாப் பணிகளையும் ஆற்றி வருகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜக்கையன் அவர்கள், கம்பம் தொகுதி, உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம், உ. அம்மாபட்டி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்திருக்கிறார். அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துகின்ற வகையில், அதற்குத் தேவையான நிலங்கள் இல்லை, போதுமான நிதியும் அரசிடம் செலுத்தப்படவில்லை. ஆகவே, அதைப் பற்றி மீண்டும் அரசு பரிசீலிக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும்,

*2020 பிப்ரவரி 17]*

*மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இன்றையதினம் நம்முடைய தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான பொன்னாள் என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற மூன்று ஆண்டுகளில் 16,382 கோப்புகளில் கையெழுத்திட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிற இந்த நல்ல நேரத்தில் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக அறிவித்து, குடிமராமத்துத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, மத்திய அரசின் நல் ஆளுமைத் திறனிற்கான தர வரிசையில், இந்தியாவிலேயே தமிழகம் முதல் இடம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற சிறப்பைப் பெற்றுத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை, வணக்கத்துடன் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*என்னுடைய கம்பம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற உ. அம்மாபட்டி கிராமத்திலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் பக்கத்து கிராமத்திற்குச் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அந்த உ. அம்மாபட்டியைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமத்தில் படிக்கின்ற மாணவர்கள் எல்லோரும், ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதனால், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உயர்நிலைப் பள்ளியை,

மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், குறைந்தது மூன்று ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், ஆனால், அங்கே 1.33 ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. அதுமட்டுமல்ல இரண்டு இலட்சம் ரூபாய் நிதியினை அரசிற்கு வழங்கிட வேண்டும். அந்த நிதியும் வழங்கப்படவில்லை. ஆகவே, இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கான பணிகளை மேற்கொள்வாரேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அதனை நிறைவேற்றித் தருவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் அனைத்துத் துறைகளுடன் ஒப்பிடும்பொழுது, பள்ளிக் கல்வித் துறைக்கு அதிகபட்சமாக 34,181.73 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செயல் திறன் தரக் குறியீட்டின்படி, அணுக்கமான பள்ளி வசதியை வழங்குவதில், இந்தியாவிலேயே தமிழகம் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்கக் கல்வியில், மாணவர் நிகர சேர்க்கையில் 99.88 சதவிகிதத்தை எட்டிய சாதனை படைத்திருக்கிறது என்பதையும், பள்ளிக் கல்வியில் மட்டுமல்ல, உயர் கல்வியிலும், இந்தியாவிலேயே தமிழகம் முதல் இடத்தைப் பெறுவதற்கு நல்ல வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாணவச் செல்வங்களுக்காக வழங்கிய 14 வகையான பொருட்களை விலையில்லாமல் வழங்குகின்ற காரணத்தினால், இன்றையதினம் நம்முடைய மாணவர்கள் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெறுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுகளில், 250 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 202 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையிலே, கம்பம் தொகுதி, உ. அம்மாபட்டி கிராமத்திலுள்ள உயர்நிலைப்

2020 பிப்ரவரி 17]

பள்ளியையும் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அங்கே பத்தாவது வகுப்பில் 30 மாணவர்கள் மட்டுமே கல்வி பயின்று வருகின்றனர். 100 மாணவர்கள் கல்வி பயில வேண்டும். பத்தாவது வகுப்பு பயிலும் மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிறைவேற்றித்தரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதைப் பொறுத்தவரையில், தி.மு.க. ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரே ஆண்டில் 100 பள்ளிகளைத் தரம் உயர்த்திக் கொடுத்தார்கள். பல கிராமங்களில் town bus வசதி இல்லாத காரணத்தினால், மாணவர்கள் town bus வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று அதிகளவில் கோரிக்கை வைக்கிறார்கள். பள்ளிகள் தரம் உயர்த்தப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், town bus–ல் அதிக தொலைவு சென்று எல்லோரும் கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, எந்தெந்தப் பகுதியிலுள்ள மாணவர்கள் அதிக தொலைவு சென்று கல்வி பயின்று வருகிறார்கள் என்பதை அரசு அறிந்து, ஒரே ஆண்டில்

அந்தந்தப் பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் வேளானந்தல் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குண்டான நிதியைச் செலுத்தி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், அந்தப் பள்ளி இதுநாள் வரையில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவில்லை. அதேபோல, மங்கலம் என்ற கிராமத்திலுள்ள பள்ளியை பெண்கள் பள்ளி, ஆண்கள் பள்ளி என இரண்டு பள்ளிகளாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தப் பள்ளியை இரண்டு பள்ளிகளாகப் பிரிப்பதற்குண்டான இட வசதி உட்பட அனைத்து வசதிகளும் அங்கே இருக்கின்றன. ஆனால், அந்தப் பள்ளியும் இதுநாள் வரையில் பிரிக்கப்படவில்லை. ஆகவே, கல்வித் துறையில் முன்னேற வேண்டுமென்ற நிலையில், அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் கல்வி கற்பதில் இடைநிற்றல் இல்லாமல் இருப்பதற்கும், மாணவர்கள் அதிக தூரம் town bus–ல் சென்று கல்வி கற்காமல் அந்தந்த ஊர்களிலேயே கல்வி கற்கும் வகையில் பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தருவதற்கும் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகளை மனதிலே ஏற்றுதான், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், எங்கெங்கெல்லாம் மாணவர்கள் கூடுதலாக இருக்கிறார்கள், எங்கெங்கெல்லாம் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்பது குறித்து இந்த அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய வேண்டுகோளையும் மனதிலே கொண்டு, இந்தப் பணிகளை இந்த ஆண்டே செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2020 பிப்ரவரி 17]*

*மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தின்போதுதான் 100 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டன என்று குறிப்பிட்டார். நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் மொத்தம் 225 பள்ளிகளை ஒரே ஆண்டில் தரம் உயர்த்தி வரலாறு படைத்திருக்கின்ற அரசு, இந்த அரசு என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து அரசுகளும் இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் இந்த அரசு பரிசீலித்து, அந்தப் பகுதிகளிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பள்ளியைத் தரம் உயர்த்தித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

**திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பள்ளிகளைத் தரம் உயர்த்துவது சம்பந்தமாகப் பேசுகின்றபோது, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றால் ஒரு இலட்சம் ரூபாய் நிதியும், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றால் இரண்டு இலட்சம் ரூபாய் நிதியும் பொது மக்களுடைய பங்கீட்டுத் தொகையாக வழங்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார். அதில், உயர்நிலைப் பள்ளிகளை,* SSA *ஆக இருந்தாலும் சரி,* RMSA *ஆக இருந்தாலும் சரி, இந்தக் காலகட்டங்களில் எல்லாம் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு இந்தத் திட்டங்களின் அடிப்படையில் மத்திய அரசே நிதி உதவி வழங்கிவிடுகிறது. தற்போது* Samagra Shiksha Abhiyan *வந்துவிட்டது. ஆகவே, இந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசிலிருந்து நேரடியாகவே நிதி பெற்று தரம் உயர்த்தக்கூடிய நிலை இருக்கின்றபோது, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு பொது மக்களிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வாங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து. மற்றொன்று, மேல்நிலைப் பள்ளிகளுக்கு பொது மக்களின் பங்கீட்டுத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் செலுத்துகிறோம். 100 பள்ளிகளைத் தரம் உயர்த்தினீர்கள்*

*என்றால் அதில் எவ்வளவு வந்து விடப்போகிறது? 2 கோடி ரூபாய் வரும். 34,000 கோடி ரூபாய் அளவிற்கு பட்ஜெட் போடக்கூடிய ஒரு துறையில், இந்த இரண்டு கோடி ரூபாய் என்பது எந்த அளவில் பெரிய தொகையாக வந்துவிடப் போகிறது என்பதுதான் எங்களுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்காக கிராமத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாயை வாங்குவது என்பது மிகவும் சிரமம். இரண்டு இலட்சம் ரூபாய் கட்டுவது என்பது மிகவும் சிரமம். எனவே, பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்றால் பொது மக்கள் பங்கீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து முற்றிலுமாக விலக்களிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல எல்லாப் பள்ளிகளுக்கும் அது விதிவிலக்கு அல்ல. கிராமங்கள் மற்றும் மலைவாழ் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை மனதில் கொண்டு, நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு ரூ.1 இலட்சமும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு ரூ.2 இலட்சமும் என இருக்கும் நிபந்தனையை தளர்த்துவது குறித்து அரசு பரிசீலிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நாங்கள் எடுத்துச் செல்வோம். ஏனென்று சொன்னால், அனைத்துப் பள்ளிகளிலிருந்தும் நாங்கள் அந்த நிதியினைப் பெறுவதில்லை.* Remote villages *என்று சொல்லப்படுகின்ற கிராமப் பகுதிகள் மற்றும் மலைவாழ் பகுதிகளில் இருக்கின்ற பள்ளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதிவிலக்கு அளித்து வருகின்றார்கள். எனவே, இதனையும் கவனத்தில்கொண்டு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*